**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானுடவியல் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக் கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 3**
**ஆண்டு இறுதிப் பரீட்சை – 2020/2021**
**LLU3901/LWU1201 அரசியலமைப்புச் சட்டம் I**
**காலம் – மூன்று (03) மணித்தியாலம்**

---

**திகதி: 13 செப்டெம்பர் 2021** **நேரம்: பி.ப 01.00 – பி. ப. 04.00**

---

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

**தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. டைமன்ட் தீவின் கல்வியினைத் தனியார்மயப்படுத்துதலுக்கும் இராணவமயமாக்குதலுக்கும் எதிராக பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் ஒன்றியத்தினால் தொடர்ச்சியான போராட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன. டைமன்ட் தீவின் தலைநகரில் அமைந்துள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னிலையில் நடைபெற்ற அவ்வாறானதொரு போராட்டத்தில் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் ஒன்றியத்தின் தலைவரான தேசப்பிரிய என்பவன் பங்குபற்றினான். அவர்களின் எதிர்ப்பினை தெரியப்படுத்தும் முகமாக ஒன்றியத்தின் அனைத்து உறுப்பினர்களும் சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளினைத் தாங்கியிருந்தனர். போராட்டத்தினை நிறுத்துவதற்கு நீதிமன்றின் கட்டளையொன்று பொலிசாருக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறி அப் பிரதேசத்திற்குரிய உதவிப் பொலிஸ் ஆணையாளரினால் நிர்வகிக்கப்பட்ட பொலிஸ் குழுவொன்று அவ்விடத்திற்கு வந்து போராட்டத்தில் குறுக்கிட்டது. மேலும், டைமன்ட் தீவில் காணப்படுகின்ற தொற்றுநோய் நிலைமையின் காரணமாக போராட்டத்தில் பங்குபற்றிய அனைத்துப் பங்கேற்பாளர்களும் விரைவு அன்டிஜென் பரிசோதனையினைச் (Rapid Antigen Test) செய்யுமாறு கோரப்பட்டனர். ஆர்ப்பாட்டத்தினை உடனடியாக நிறுத்துமாறும் அன்டிஜென் பரிசோதனையினை செய்வதற்காக ஒருவருக்கொருவர் ஒருங்கிணையுமாறும் அவர்கள் கோரப்பட்டனர். பொலிஸாரின் நடவடிக்கையினால் எரிச்சலுற்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னேறிச் சென்று சாலைத் தடுப்புக்கள் அனைத்தையும் சேதப்படுத்தினர். அருகிலிருந்த உயர்பாதுகாப்பு வலயத்தினுள் தன்னுடைய சகபாடிகள் சிலருடன் சென்ற தேசப்பிரிய தீவின் தற்போதைய அரசாங்கத்தினை விமர்சிக்கின்ற கேலிச் சித்திரங்களினை வரையத் தொடங்கினான். சித்திரம் வரையப்பட்டுக் கொண்டிருக்கையில், சிரேஸ்ட அதிகாரியின் கட்டளைகளைத் தொடர்ந்து போராட்டக்காரர்களினை நோக்கி இராணுவத்தினர் சுட்டனர். அவ்விடத்திலேயே தேசப்பிரிய இறந்ததுடன் வேறு இரு மாணவர்கள் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர். சனாதிபதியினை ஏற்றிச் சென்ற வாகன அணிவகுப்பில் அவ் இராணுவ அதிகாரி இருந்தமையினையும் அவ் அதிகாரி டைமன்ட் தீவின் சனாதிபதியின் நண்பர் என்பதனையும் தேசப்பிரியவின் பெற்றோர் பின்னர் தெரிந்து கொண்டனர்.

I. துப்பாக்கிச் சூட்டினைச் செய்த இராணுவ அதிகாரிக்கு சனாதிபதி மன்னிப்பினை வழங்கிய டைமன்ட் அரசின் சனாதிபதி கைது செய்யப்படுவதிலிருந்து அவனை காப்பாற்றி சட்ட நடவடிக்கைகள் ஏதேனுமிலிருந்து அவனுக்கு விடுபாட்டினை வழங்கினார்.

II. சனாதிபதி மன்னிப்பினை வழங்கும் தீர்மானத்தை கேள்விக்குட்படுத்தி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து டைமன்ட் அரசின் சனாதிபதிக்கு எதிராக அடிப்படை உரிமை வழக்கொன்றை தேசப்பிரியவின் தந்தை தொடுத்தார். டைமன்ட் தீவின் அரசியலமைப்பானது இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்பினை ஒத்ததாகும். மேற்போந்த சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்சிக்காரர் ஒவ்வொருவருடையதும் நடவடிக்கைகளுடன் நீர் உடன்படுகின்றீரா? ஆராய்க. உமது ஆராய்வானது பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளினால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(25 புள்ளிகள்)

2. பின்வரும் சந்தர்ப்பங்களினை வாசித்து, அச் செயற்பாடுகளின் சட்டவாந்தன்மையினை பாராளுமன்றத்தின் சட்டவாக்க மீயுயர்தன்மைக் கோட்பாட்டின் மதிப்பிடுக. பேர்ள் அரசின் அரசியலமைப்பானது இலங்கையின் இரண்டாம் குடியரசு யாப்பினை ஒத்தது எனக் கருதுக.

I. அரசியலமைப்பின் அத்தியாயம் III இன் பிரிவு 10 இற்கும், பிரிவு 6 இற்கும் புதிய ஏற்பாடொன்றினைச் சேர்ப்பதற்கான அரசியலமைப்பின் சீர்திருத்தத்திற்கான சட்டமூலமொன்றை பேர்ள் நாட்டின் அரசாங்கமானது சமர்ப்பித்தது. அதற்கமைவாக, அத்தியாயம் III இன் பிரிவு 10 ஆனது சிந்தனை செய்வதற்கானதும் மனச்சாட்சியினை பின்பற்றுவதற்கானதுமான சுதந்திரம், மற்றும் மதச் சுதந்திரம் என்பவற்றை அடிப்படை உரிமையாக ஏற்பாடு செய்வதுடன் பிரிவு 6 ஆனது தேசியக் கொடியுடன் தொடர்புபடுகின்றது. சிவில் அமைப்புக்களினால் இச் சட்டமூலமானது கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

II. பேர்ள் நாட்டின் சுற்றுலா விருத்திச் சட்டத்தின் சீர்திருத்தப்பட்ட பிரிவு 12 ஆனது, ஆண் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு சேவைக் காலத்திலும் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னரும் அவர்களின் நலன்களுக்காக சலுகை அடிப்படையிலான சுகாதாரத் திட்டத்தினை வழங்குகின்றது. மேலும், பெண் ஊழியர்களுக்கு அவர்களின் ஓய்வின் போது நிறைவுறுகின்றதான விசேட சுகாதாரத் திட்ட சிறப்புரிமையினையும் அப் பிரிவு ஏற்பாடு செய்கின்றது. ஊழியர்களின் சமவுரிமைக்கான சர்வதேச சமவாயத்தில் (ICERE) கையொப்பமிட்டு பேர்ள் அரசானது அங்கீகரித்துள்ளது. ICERE இன்

உறுப்புரை 09 ஆனது ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சமத்துவமான கொடுப்பனவிற்கான உரிமையுடன் தொடர்புபடுகின்றது.

(25 புள்ளிகள்)

3. Dr. L.J.M. Cooray இன் கருத்திற்கமைய, வலுவேறாக்கமானது மூன்று வித்தியாசமான விடயங்களுடன் தொடர்புபடுகின்றது :

i) அரசாங்கத்தின் மூன்று துறைகளுள் ஒன்றுக்கு மேற்பட்ட துறையுடன் ஒரே நபர்கள் தொடர்புபடக் கூடாது.

ii) அரசாங்கத்தின் துறையொன்று ஏனைய துறைகளின் செயற்பாடுகளினைக் கட்டுப்படுத்தவோ அல்லது தலையிடவோ கூடாது.

iii) அரசாங்கத்தின் துறையொன்று மற்றையதன் பணிகளைச் செய்யக் கூடாது.

***Reflections on the Constitution and the Constituent Assembly, (1971), p. 107***

இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பினை ஆக்கியோர் மேற்போந்த மூன்று காரணிகளினையும் புறக்கணித்துள்ளார்கள் என நீர் கருதுகின்றீரா? நடைமுறை உதாரணங்கள், அண்மைய தீர்ப்புச் சட்டம் மற்றும் அரசியலமைப்பு எடுத்துக்காட்டுக்கள் என்பவற்றுடன் ஆராய்க.

(25 புள்ளிகள்)

4. ‘சுதந்திரத்திற்கான மிகப் பெரிய ஆபத்தானது உணரப்பட்ட குறுக்கீடு அல்லது அரசாங்க நிறுவனங்கள் அல்லது அரசியற் கட்சிகள் என்பவற்றின் தலையீடுகள் என்பவற்றிலிருந்து ஏற்படுகின்றது. பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காக, ‘சட்டத்தின் ஆட்சியினை’ வளர்ப்பதற்கும் நிறுவுவதற்கும் நீதித்துறை சுதந்திரம் மட்டுமன்றி மட்டுமல்ல அது சுதந்திரமாகத் தோன்றுவதனையும் முக்கியமாக உறுதி செய்ய வேண்டும்.

தேசிய சட்ட மாநாட்டு ஒன்றுகூடலில் உரையாற்றுவதற்கு நீர் அழைக்கப்பட்டுள்ளீர் எனக் கருதுக. ‘நீதித்துறையின் சுதந்திரத்தினால் தக்க வைத்துக் கொள்ளப்பட்ட சட்டவாட்சியின் ஆதிக்கம்’ என்ற தலைப்பில் உமது உரையினைத் தயாரிக்க.
நீதித்துறைச் சுதந்திரம் மற்றும் சட்டவாட்சி என்பன தொடர்பிலான கோட்பாட்டு மற்றும் நடைமுறை அறிவினை உமது உரை வெளிப்படுத்த வேண்டும்.

(25 புள்ளிகள்)

5. இந்தியானா என்ற நாட்டின் கடலோரப்பகுதியில் இரசாயனங்கள் நிரப்பப்பட்டதும் தீ விபத்திற்குள்ளானதுமான சரக்குக் கப்பல் மெதுவாக மூழ்குவதனால் சுற்றுச்சூழல் பேரழிவு ஏற்பட்டுள்ளது. மூழ்கும் கப்பலிலிருந்து இரசாயனங்கள் உட்பட கழிவுகள் கரையில் ஒதுங்குவதனால் கரையோரத்திலிருந்து சுமார் 100 km எல்லைக்குள் மீன்பிடித்தலினை தடைசெய்வதற்கு இந்தியானாவின் அரசாங்கம் தீர்மானித்தது. ஆழ்நீரில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தாலும், இரசாயனக்கலப்புத் தொடர்பில் நுகர்வோர் பயப்படுவதால் கடலுணவின் விற்பனை சரிந்துள்ளது. இச் சம்பவத்தினால் மீன்பிடித்துறையில் தங்கியிருந்த பல மக்கள் தம் வாழ்வாதாரத்தினை இழந்துள்ளார்கள். கடலோரப்பரப்பில் மீன்கள் குறைவடைந்துள்ளமையினால் இவ் மக்கள் குழுமத்திடையே விரக்தி உருவாகியது. தம்முடைய தொழிலை இழந்தவர்களுக்கு நிதி ஆதரவினை வழங்குவதற்கு அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையினையும் எடுக்கவில்லை.

கடல்வாழ் உயிரினங்களுக்கான நீண்டகாலப் பாதிப்பு, மீன் சாப்பிடுவதால் ஏற்படும் பாதிப்புக்கள், சுகாதாரப் பாதிப்புக்கள் மற்றும் வாழ்வாதார இழப்புக்கள் என்பன தொடர்பில் ஆராய்வதற்காக இந்தியானாவின் 'ஐக்கிய மீனவர் சங்கத்தின்' தலைவரான திரு சொய்சா என்பவன் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்தான்.

கூட்டத்தின் பின்னர், இவ் இக்கட்டாக சூழ்நிலையில் தமக்கு நிதி ஆதரவினை வழங்குமாறு அரசாங்கத்தினைக் கட்டாயப்படுத்துவதற்காக போஸ்டர்கள் மற்றும் சுவரொட்டிகளை தாங்கியவாறு அமைதியான போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அவர்கள் தீர்மானித்தனர். போராட்டத்திற்கு முந்தைய தினம் அவனுடைய அப்பாவித்தனம் தொடர்பான நிகழ்வுகளுக்கு புறம்பாக திரு சொஸ்சாவினை பொலிஸார் கைது செய்ததுடன் அவனை கடுமையாகத் தாக்கி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர்.

பின்னர் நீதவானின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படாமல் அவன் தடுத்து வைக்கப்பட்டான். மேலும் அவன் கம்பியால் தாக்கப்பட்டு நான்கு நாட்களுக்கு மேலாக இருட்டு அறையில் வைத்திருக்கப்பட்டான். நீரோ அல்லது உணவோ அவனுக்கு வழங்கப்படவில்லை. தொடர்ச்சியாக அவன் தாக்கப்பட்டதுடன் சுயநினைவற்ற நிலைக்குச் சென்றதுடன் அவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். சுமார் இரண்டு மாதங்கள் மருத்துவமனையில் இருந்த பிறகு, பொலிஸ் நிலையத்தில் அவன் எதிர்நோக்கிய எதிர்பாராத நிகழ்வின் காரணமாக திரு சொஸ்சாவிற்கு உடல் மற்றும் மனச்சிக்கல்கள் சில இருப்பதனை அவனுடைய மனைவி அவதானித்தாள். தற்போது தன்னுடைய தொழிலினை தொடர்ந்து செய்வதற்கு அவனுக்கு முடியாதுள்ளதுடன் அவனின் குடும்பமானது பாரிய நெருக்கடியில் உள்ளது.

திரு சொஸ்சாவின் மனைவி நீதிமன்றத்தில் வழக்கொன்றினைத் தொடர்வதற்கு விரும்புகின்றாள். சமூக நலன்புரி நிறுவனமொன்றின் வழக்கறிஞரொருவர் என உம்மைக் கருதுவதுடம் இந்தியானாவின் அரசியலமைப்பானது இலங்கையின் 1978

ஆம் ஆண்டின் அரசியலமைப்பினை ஒத்தது எனவும் அனுமானிக்க. திருமதி சொஸ்சாவிற்கு ஆலோசனை வழங்குக. உமது ஆலோசனையானது பொருத்தமான பகுதிகளில் இலங்கையின் அண்மைய அரசியலமைப்பு விருத்திகளினால் ஆதாரப்படுத்த வேண்டும்.

(25 புள்ளிகள்)

6. ‘இலங்கையின் காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசியலமைப்பின் விருத்தியினை எளிதாக்கிய முக்கியமான மூலாதாரமாக சோல்பரி அரசியலமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட வெஸ்மினிஸ்டர் மாதிரியானது அமைகின்றது.

இக் கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கையின் 1972 ஆம் ஆண்டு மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கள் மற்றும் அண்மைய அரசியலமைப்பு விருத்திகள் என்பவற்றினை மேற்கோள்காட்டி உமது விடையினை விமர்சனரீதியாக ஆராய்க. இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பினை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளினை முன்வைக்க. உமது விடையானது நடைமுறை சம்பவங்களினால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(25 புள்ளிகள்)

**** *பதிப்புரிமையுடையது*****